[*1994 ஏப்ரல் 13*

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமத்திற்கு, ஆதிதிராவிட நலத் துறையில் பணியாற்றும் தனி வருவாய் ஆய்வாளர் அனுப்பப்பட்டு, அதன்மூலம் அரசுக்குக் கோப்புகள் அனுப்பப்பட வேண்டுமென்று பணித்து இருக்கிறோம். கோப்புகள் வந்தவுடன், நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 279, திரு. பி. வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. மா. சா. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.*

279—

திருக்கோவில் திருப்பணிகளை மேற்கொள்பவர்களுக்கு விருதுகள் வழங்குதல்.

*** 22625**— *திரு.பி.வி. இராஜேந்திரன்:*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருக்கோயில் திருப்பணிகளை மேற்கொள்ளும் தனி நபர் மற்றும் கூட்டமைப்புகளைக் கௌரவித்து விருது வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு.வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கோயில் திருப்பணிகளை மேற்கொள்ளும் நபர்கள் தங்கள் பக்தியின் காரணமாக கோயில்களில் ஈடுபாடு கொண்டு தாமாகவே முன்வந்து உபய திருப்பணிகளைச் செய்து வருகின்றனர். உபயத் திருப்பணிகள் செய்பவர்கள் விவரம் கல்வெட்டுகளில் பொறிக்கப்படுகிறது. திருக்குட முழுக்கு விழாவின் திருப்பணிக்கு நன்கொடை வழங்கியவர்கள் பெயர்கள் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டு பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு விருது வழங்குவது அவசியமில்லை என்று கருதப்படுகிறது.

முற்பகல் 10-55

திரு. மா. சா. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய தமிழர்களுடைய பெருமையினைப் பறைசாற்றும்வண்ணம் தமிழ்நாட்டிலே பல்வேறு திருக்கோயில்கள் நம்முடைய முன்னோர்களால் சிறப்பான முறையிலே கட்டப்பட்டு,

1994 ஏப்ரல் 13]

அவையெல்லாம் தற்போது சரியான முறையிலே பராமரிக்கப்பட முடியாமல் உள்ளன. இந்த நிலைமையினை மாற்றியமைக்கும் முகமாக நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், திருக்கோயில் புனரமைப்பு நிதியினைத் திரட்டி, அவற்றின் மூலம் சிறப்பான முறையிலே அந்தக் கோயில்களையெல்லாம் பராமரித்து வருகின்றார்கள். இருந்தாலும், திருக்கோயில்கள் அனைத்தையும் அரசே பராமரிப்பது என்பது இயலாத காரியம். எனவே, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற திருக்கோயில்களைப் பராமரிப்பதற்கு அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற வசதி வாய்ப்பு படைத்தவர்கள், செல்வந்தர்கள், சில கூட்டமைப்புகள் முன்வருமேயானால் அவற்றை நம்முடைய அரசு பயன்படுத்திக் கொண்டு, அவர்களுக்கு அரசின் சார்பாக விருதோ அல்லது கௌரவப் பதவியோ வழங்கப்பட்டால் அந்தக் கோயில்களெல்லாம் மீண்டும் சரியான முறையிலே புனரமைக்கப்பட்டு, நம்முடைய தமிழர்களுடைய பெருமையைப் பறைசாற்றும்வண்ணம் விளங்கும். எனவே, தனி நபர்களும், கூட்டமைப்புகளும் அந்தத் திருக்கோயில்களைப் பராமரிப்பதற்கு, அந்தத் திருப்பணியினைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் அனுமதி கொடுத்து, அவர்களுக்கு அத்தகைய விருதினை வழங்கி கௌரவப்படுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோயில்களில் திருப்பணி வேலைகள் குடமுழுக்கு விழா இவை போன்றவைகளுக்குப் பக்தர்கள் தானாகவே வந்து தங்களுடைய நன்கொடைகளை அளிக்கின்றார்கள். பெரும்பாலான பக்தர்கள் தாங்கள் கொடுக்கின்ற இந்தக் கொடைகள்கூட வெளியே தெரியக் கூடாது என்கின்ற அளவிலே பக்திதனை மதித்து அவர்கள் நல்ல செயல்களைச் செய்கின்றார்கள். இதுபோன்ற பரிசுகள் வழங்குவது, கௌரவிக்கின்ற ஒரு திட்டம் இதுவரையும் கிடையாது. இருந்தாலும்கூட பெரிய அளவிலே அவர்கள் 15 இலட்சம், 20 இலட்சம் செலவழிப்பதாக இருந்தால், அதுமாதிரி நாங்கள் செலவழிக்கப்போகிறோம், எங்களைக் கௌரவிப்பீர்களா என்று அரசிடம் கேட்பார்களேயானால் அதுகுறித்து பரிசீலனை செய்ய ஆவன செய்யப்படும். அதோடு, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே தெய்வீகத்திலே ஈடுபடுகின்றவர்கள், தெய்வீகப் பணியைச் செய்கின்றவர்கள் இப்பொழுது அதிகரித்திருக்கிறார்கள். ஆங்காங்கே யாரைப் பார்த்தாலும் நான் அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று இன்று கோயில்களிலே

கூட்டங்களும் நிரம்பிக் கொண்டிருக்கின்றன; உண்டியலும் குவிந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, இதுபோன்ற கோரிக்கைகள் ஏதாவது வருமேயானால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 280, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

280—

முடிதிருத்தும் தொழிலை ஊக்குவிக்க திட்டம்.

*** 21558**— டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

முடிதிருத்தும் தொழிலை ஊக்குவிக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முடிதிருத்தும் தொழிலை ஊக்குவிக்க என அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வளர்ந்துவரும் நாகரீகக் காலத்தில் இப்பொழுதெல்லாம் நாம் நினைத்தபடி முடி திருத்துவதைச் செய்ய முடியாது. முன்கூட்டியே அப்பாயின்ட்மெண்ட் செய்கின்ற அளவிற்கு நம்முடைய முடி திருத்துகின்றவர்களுடைய சூழ்நிலை வளர்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், மணப்பெண் வீட்டிலே எப்படி மண நாளுக்குத் தேதியைக் குறிப்பதற்கு முன்னால் கல்யாண மண்டபத்தினுடைய வசதியைப் பார்த்துத் தேதியைக் குறிக்கின்றார்களோ அதைப் போல அங்கே சிகை அலங்கார நிலையத்திலே அப்பாயின்ட்மெண்ட் இருக்கிறதா என்று பார்த்து மண நாளைக் குறிக்கின்ற அளவிற்கு நம்முடைய நாட்டில் நாகரீகம் வளர்ந்திருக்கின்ற காரணத்தினாலும், குக்கிராமங்களிலெல்லாம்கூட, அரசியல் சர்ச்சைகள், இப்படிப்பட்ட சிகை அலங்கார நிலையங்கள் மூலமாக ஆரம்பிக்கிற காரணத்தினால்......